மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 11
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
हन्ड्रड विलज मिनस्ट्री
ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**செப்டம்பர் 2010**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

## TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2010 செப்டம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

# நான் உன்னைக் குணமாக்குவேன்.

2 இராஜா. 20 : 5



கர்த்தருடைய கிருபையினால் **TVGM ஏலீம் சிறுவர் இல்லத்தின்** அடுத்த கட்ட கட்டிடப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

## இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

# TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER** **Letter Dated: 07.08. 2010**



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய கிருபையினால் TVGM ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுதும் TVGM ஸ்தாபகர் சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் U.K. தேசத்தில் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சரீரசுகத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

2010 ஜூலை மாதத்தில் இரண்டு இடத்தில் **100- கிராம ஊழியங்கள்** தேவனுடைய நாம மகிமைக்கென்று நடத்தப்பட்டன. முதலாவதாக **தர்மபுரி** மாவட்டத்தில் நடத்தப்பட்டது. அங்கு 7,982 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. இரண்டாவதாக **கன்னியாகுமரி** மாவட்டத்தில் நடத்தப்பட்டது. அங்கு 11,725 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

மேலும் இந்த மாதத்தில் இரண்டு ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது. இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

திருச்சியிலும், குண்டலிலும் சிறுவர் இல்ல கட்டிடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட தயவுசெய்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

TASOL - ன் தேவைகள் சந்திக்கப்படவும், TVGM ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

தேவனுக்கே மகிமை!

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

# நான் உன்னைக் குணமாக்குவேன்.

சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்

2 இராஜாக்கள் 20 : 5

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே! இதோ தேவனுடைய வார்த்தை உங்களுக்கு நேராய் கடந்து வருகிறது.

**2இராஜா.20:5**

**நான் உன்னைக் குணமாக்குவேன்.**

ஆம்! நம் தேவன் இந்த மாதம் உங்களை குணமாக்க விரும்புகிறார். இன்று உங்கள் சரீரத்திலே ஒரு சுகவீனம் இருக்கலாம் அல்லது மனதிலே ஒரு சுகவீனம் இருக்கலாம் அல்லது உள்ளான வியாதி இருக்கலாம், எந்த சூழ்நிலையிலிருந்தாலும் தேவன் இந்த மாதம் உங்களை குணமாக்க சித்தம் கொண்டுள்ளார்.

**2இராஜா.20: 1–5** வரை உள்ள வசனங்களில் எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்தின் விளிம்புக்கு வந்து விட்டார் என வாசிக்கிறோம். இந்த நேரத்தில் தான் ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவை சந்திக்கிறான். அவன் ராஜாவிடம் வந்து **"நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்து போவீர் "** என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி:

**"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்"** என்று விண்ணப்பம் பண்ணி, மிகவும் அழுதான்.

ஏசாயா பாதி முற்றத்தைவிட்டு, அப்புறம் போகிறதற்கு முன்னே, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு மறுபடியும் உண்டானது. 2இராஜா.20:5 **"உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயி ருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் : உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய்"**

மேலும் 2 இராஜா.20:6 **"உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின்நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன்"** இவ்வாறு கர்த்தர் சொன்னதை தீர்க்கதரிசி ராஜாவிடம் கூறினார்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! இன்று நீங்கள் என் கேன்சர் வியாதி குணமாகுமா? என் சரீரத்திலுள்ள கட்டி மறையுமா? எனக்கு ஒரு குழந்தை பிறக்குமா? எனக்கு ஒரு எதிர்காலம் உண்டா? என்று வேதனையோடு கலங்கிக் கொண்டிருக்கலாம்.

ஆம்! பயப்படாதீர்கள். தேவன் உங்களை குணமாக்கி, சந்தோஷப் படுத்த இந்த மாதத்தில் ஆயத்தமாக இருக்கிறார். அவர் எதிர்பார்ப்ப தெல்லாம் **"உங்கள் முகத்தை அவரிடம் திருப்பி, அவரை மட்டுமே கூப்பிட வேண்டும் ".**

நீங்கள் குணமடைவதற்கு மூன்று காரியங்களை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாயி ருக்கிறது.

***1. பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனை நோக்கி கூப்பிட வேண்டும். ( மனந்திரும்புதல் )***

***2. தேவனுடைய சித்தத்தை செய்து, உலகத்திற்கு விலகி நம் சுகத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற வேண்டும். ( தேவசித்தம் செய்தல் )***

***3. தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்த வேண்டும். ( நினைவுகூருதல்)***

**முதலாவது:**

நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, தேவனை நோக்கி கூப்பிட வேண்டியது அவசியமாயி ருக்கிறது. முழு இருதயத்தோடே அவரைக் கூப்பிட்டால் அவர் உங்கள் கூப்பிடுதலைக் கேட்டு வியாதியிலி ருந்து விடுவிப்பார். எந்த வியாதியாயி ருந்தாலும் இவ்வுலகின் எல்லா வியாதி களையும்விட இயேசு வல்லமையுள்ளவர்.

நீங்கள் வேதத்தை வாசிக்கும் போது, தேவமனிதர்கள் அழுது கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, அவர்கள் சுகத்தை பெற்றுக் கொண்டதை நீங்கள் அறியலாம். நம் தேவனை மட்டுமே கூப்பிடும்பொழுது, உங்கள் கூப்பிடுதலை கேட்டு, உங்கள் விண்ணப்பங்களுக்கு மறுஉத்தரவு அருளும் தேவன். இதை சங்கீதங்களில் பல இடங்களில் நாம் வாசிக்கலாம். **சங்.3:4**ல் தாவீது சொல்லுகிறார்: **நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத் திலிருந்து எனக்குச் செவி கொடுத்தார்.**

**சங்.34:4**ல் அவர் சொல்கிறார்: **நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.**

பின்வரும் பல இடங்களிலும் நாம் வாசிக்கலாம். (சங்.50:5, சங்.55:16–17, சங்.57:2–3, சங்.66:20, சங்.86:7, சங்.91:15, சங்.107:6, சங்.118:5 ).

மேலும் நாம் **ஏசாயா 30:19**ல் **"உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்"** என்று வாசிக்கிறோம்.

**மத்தேயு 21:22**ல் **"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர் களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்"** என்று வாசிக்கிறோம்.

தேவன் எப்படி நம்முடைய கூப்பிடுதலுக்கு செவி கொடுக்கிறார் என்பதை பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல இடங்களில் வாசிக்கலாம். **யாத்.3:9ல் "இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்."**

என்று வாசிப்பதுபோல இஸ்ரவேலரின் ஜெபத்தை தேவன் கேட்டார்.

**1இராஜா.17:22** ல் **"கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது; அவன் பிழைத்தான்"** என்று வாசிப்பது போல கர்த்தர் எலியாவின் கூப்பிடுதலைக் கேட்டு உயிரை திருப்பிக் கொடுத்தார். யோனா 2:2 **"என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்"** என்று யோனாவை பற்றி வாசிக்கிறோம்.

## இரண்டாவது:

தேவனுடைய சித்தத்தில் இருப்பதற்கு உலக ஆசையிலிருந்து விலகி இருப்பது நமக்கு தேவை. அநேக நேரங்களில் அவரது சித்தத்திலிருந்து விலகி விடுகிறோம். நீங்கள் அவரது சித்தத்திலிருந்து விலகும் போது, கஷ்டத்தில் சிக்கி கர்த்தருடைய மகிமையை உங்கள் வாழ்க்கையில் இழந்து விடுவீர்கள். ஆகவே மனந் திரும்பி உலக வழிகளை தவிர்த்து, கர்த்தருடைய வழிகளை ஏற்றுக் கொள் ளும்போது நாம் சுகத்தையும், மற்ற ஆசீர்வாதங்களையும் பெற முடியும்.

1யோவான்5:14,15 **"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்கு செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."**

## மூன்றாவது:

தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்தவற்றை எப்பொழுதும் நினைவு கூர்ந்து, மகிமையை அவருக்கு மட்டுமே செலுத்த வேண்டும். நாம் எல்லா மகிமையையும் தேவனுக்கு செலுத்தும்போது, நமது வாழ்க்கையில் இன்னும் பல அற்புதங்களை செய்து, இன்னும் அதிகமாய் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். ஆனால் அநேக சமயங்களில் நாம் இதை செய்வதில் குறைவுபடுகிறோம். இயேசு பத்து குஷ்டரோகிகளை சுகப்படுத்திய ஒரு சம்பவத்தை வேதத்தில் நாம் வாசிக்கிறோம். ஒரே ஒருவன் மாத்திரம் அற்புதத்தை நினைவுகூர்ந்து, **தேவனுக்கு நன்றியுள்ளவனாக இருந்தான்.** ( இந்த சம்பவத்தை லூக்கா 17: 11–19 ல் வாசிக்கலாம் ). இதைப் போல நாம் தேவனுக்கு எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

**பக்தன் பாடுகிறார்:**

***என்னை குணமாக்கும்***
***என் தேவன் நீரே***
***என்னை குணப்படுத்துகிறவரே***
***என் கர்த்தர் நீரே***
***உம் வார்த்தையை அனுப்பி***
***என் வியாதியை குணமாக்கினீரே***
***என்னை குணப்படுத்துகிறவரே***
***என் கர்த்தர் நீரே***

இந்தப் பாடலை இந்த மாதத்தில் பாடிக் கொண்டே இருங்கள். மேலும், உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

***என் தேவன் என் வியாதியை***
***குணமாக்குவார்***
***என் தேவனாலே***
***கூடாத காரியம் ஒன்றுமில்லை***
***என் தேவனே என்னை***
***நிச்சயமாக குணப்படுத்துவார்.***
**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "100 - **கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# திருநெல்வேலி மாவட்டம் - இராதாபுரம் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2010 செப்டம்பர் 27** திங்கள் காலை 9 மணி முதல் **அக்டோபர் 2** சனி இரவு 10 மணி முடிய **இராதாபுரம் யூனியனிலுள்ள கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 செப்டம்பர் 27** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2010 அக்டோபர் 2** சனி இரவு **7 - 10** மணி

**( 2010 செப். 27 - அக். 2 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பெத்தானி ஏ.ஜி. சபை**
**காரியாகுளம்**
**தாலுகா ஆபிஸ் வழி,**
**இராதாபுரம் - 627 111.**
**திருநெல்வேலி மாவட்டம்.செல்: 98652 41357**

உதவி செய்ய முன் வந்த Rev.**பாக்கியநாதன்**,Pr.**ரமேஷ்** ஆகியோருக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

# தர்மபுரி மாவட்டம் - தர்மபுரி யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

நாள்: 12.07.2010 – 17.07.2010

கர்த்தருடைய கிருபையால் தர்மபுரி மாவட்டம் – தர்மபுரி யூனியனில் 12.07.2010 திங்கள் முதல் 17.07.2010 சனி வரை **“100 கிராம ஊழியம்”** ஆசீர்வாதமாக நடைபெற்றது.




முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு இவைகளை தர்மபுரி A.G. சபை **போதகர் சுந்தர்சிங்** அவர்கள் பொறுப் பெடுத்துக் கொண்டார்கள். கோயம்புத்தூர் சித்ரா A.G. சபை **பாஸ்டர் டேனியல்** அவர்கள் இதற்காக எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த 21 பேர் கிராம ஊழியம் செய்ய வந்திருந்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் தர்மபுரி யூனியனிலுள்ள எல்லா கிராமங்களுக்காகவும் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் தர்மபுரி அப்போஸ்தல ஐக்கிய சபையின் **பாஸ்டர் பொன்ராஜ்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.





கிராம ஊழியர்களை 7 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு கிராமங்களில் போய் தங்கியிருந்து, வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம், **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதி மற்றும் சிலுவைக்கொடிகளை இலவசமாக கொடுத்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 7982 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 2000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 3000 பிற கைப்பிரதிகள்,7000 சிலுவைக்கொடிகள் வழங்கப்பட்டது. 102 புற மத நண்பர்கள் விலாசங்கள் சேகரித்து வரப்பட்டது.

ஊழியங்களை முடித்து கடைசிநாளில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக அறிவித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தை சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் நடத்தினார்கள். **பாஸ்டர் டேனியல்** தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM சார்பில் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி வழங்கப்பட்டது.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

### குழு 1: சகோ. மாற்கு மாரியப்பன், தானியேல்,

**நல்லம்பள்ளி** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். அதியமான் கோட்டை என்ற கிராமத்தில் ஒருவர் எங்களை கூப்பிட்டு மதமாற்றம் செய்ய வந்துள்ளீர்களா? உங்களை கட்டாய மதமாற்ற சட்டத்தின் கீழ் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று மிரட்டினார். வேறு அநேக மக்கள் எங்களை தங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 2: சகோதரி ரூத் கலா, ரெபேக்காள், தேவகிருபை.

**கம்பைநல்லூர்** மற்றும் அதைச் சுற்றியுள்ள 7 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து நற்செய்தியை அறிவித்தோம். வியாதி உள்ளவர்கள் பலருக்காக ஜெபித்தோம். நாங்கள் பல இடங்களில் காட்டுப் பகுதிக்குள் நடந்து சென்று ஊழியம் செய்ய கர்த்தர் பெலன் தந்தார். மொத்தம் 1012 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 3: சகோ. பால்ராஜ், தாவீது, செபஸ்தியான்.

**கீழ்கொள்ளுப்பட்டி, காரிமங்கலம், பொம்மஹள்ளி** ஆகிய கிராமங்களில் மக்கள் சுவிசேஷப் புத்தகங்களை உற்சாகமாக வாங்கினார்கள். ஒரு சிலர் மட்டும் வேண்டாம் என்றனர். சுகவீனமாக இருந்தவர்கள், வாழ்க்கையில் ஒடிந்து போனவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 4: சகோதரி மேரி மீனா, கஸ்தூரி, மரியாள், கிரேஸ்பத்மா

**கடத்தூர், பொம்மிடி** ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். மக்கள் ஆர்வமாக சுவிசேஷத்தைக் கேட்டார்கள். ஒரு மூதாட்டியின் கஷ்ட நிலைமையைப் பார்த்து அவர்களுக்காக ஜெபித்தோம். இங்குள்ள கிராமங்களில் தண்ணீர் கஷ்டம் அதிகமாக உள்ளது. கர்த்தர் இம்மக்களுக்கு செழிப்பை தரும் படியாக ஜெபித்தோம். மொத்தம் 1020 சுவிசேஷப் புத்தகங்கள், 980 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

### குழு 5: சகோ. சிவக்குமார், ஆசீர்பாண்டி, வின்சென்ட்.

நாங்கள் கிராமங்களில் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிவித்து, சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, ஒரு அம்மா எங்களை தனது வீட்டிற்கு அழைத்துப் போய் உட்கார வைத்து, இயேசுவைப் பற்றி சொல்லுங்கள் என்றார். அந்த வீட்டில் 3 பெண்கள் இருந்தார்கள். இவர்களுக்கு இயேசுவைப் பற்றி சொன்ன போது, வாஞ்சையாக கேட்டு தங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, ஞாயிற்று கிழமை சர்ச்சுக்கு கண்டிப்பாக வருவோம் என்றார்கள். ஒரு ஸ்கூலில் அங்கிருந்த ஆசிரியருக்கு சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். உடனே அவர்கள் வெள்ளைக்காரன் இங்கு வந்து மதத்தைப் பரப்பினான். இவர்கள் பணம் கொடுத்து மதம் மாற்றுகிறார்கள் என்று இழிவாகப் பேசினார்கள். நாங்கள் உடனே அந்த வெள்ளைக்காரன் தான் படிப்பை கொண்டு வந்தான், துணி உடுக்க கற்று கொடுத்தான் என்று கூறினோம். மொத்தம் 1025 சுவிசேஷப் புத்தகங்கள், 990 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி விமலா தாஸ், அன்னாள், தெபோராள்.**

நாங்கள் 11 கிராமங்களில் சென்று யோவான் புத்தகம் கொடுத்து, சுவிசேஷத்தை அறிவித்தோம். சிலர் வேண்டாம் என வாங்க மறுத்தார்கள். பலர் சாதாரணமாக பெற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1500 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோ. யோசுவா, ஸ்டீபன், அன்பு சாமுவேல்.**

நாங்கள் 10 கிராமங்களில் சென்று வீட்டிற்கொரு யோவான் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். அநேகர் விரும்பி புத்தகங்களை வாங்கினார்கள். **பாப்பாரப்பட்டி** கிராமத்தில் ஒருவர் மிகவும் கோபமாக இங்கு இப்படி புத்தகம் எதுவும் கொடுக்கக் கூடாது, போய் விடுங்கள் என்றார். நாங்கள் மற்ற பகுதி களுக்கு சென்று வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 825 சுவிசேஷப் புத்தகங்கள், 1230 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**2010 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : கரூர்
யூனியன் : தோகைமலை
நாள் : 11.09.2010
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் K. பால் சடையன்**
**நல்லாயன் நற்செய்தி மன்றம்**
**வடசேரி ரோடு**
**காவல்காரன்பட்டி - 621 313**
**கரூர் மாவட்டம்.**
செல்: **9443101320.**

## ❖ 2010 ஜூலை மாதம் இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை ❖



கர்த்தருடைய கிருபையால் 10.07.2010 அன்று வேலூர் மாவட்டம் – அரக்கோணம் யூனியன் **பெத்தேல் அசெம்பிளி** சர்ச்சில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. பாஸ்டர் A.M.S. ஜோசப் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்தார்கள்.

முகாமிற்கு வரும்படி அழைப்புக் கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் ஒரு சகோதரி மட்டும் மிகுந்த ஆர்வமுடன் வந்து கலந்துகொண்டார்கள்.

இவர்களுக்கு இயேசுவின் மேல் விசுவாசம் பெருகும்படி இயேசு செய்த அற்புதங்கள், அதிசயங்களை சொல்லி இயேசு தான் மெய்யான தெய்வம், அவரை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும் என்று சொல்லி உற்சாகப் படுத்தினோம். அந்த சகோதரியும் தன்னை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து தங்கள் குடும்பத்திலுள்ள பிரச்சனை களுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். இனி ஞாயிறு ஆராதனைக்கு தவறாமல் வருவேன் என்று உறுதியாக கூறி சென்றார்கள்.

பாஸ்டர் A.M.S. ஜோசப் சகோதரிக்காக ஜெபித்தார்கள். புதிய ஏற்பாடு, சிலுவைக்கொடி கொடுத்து மதிய உணவும் வழங்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை!**

# கன்னியாகுமரி - குருந்தன்கோடு யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

நாள்: 19.07.2010 – 23.07.2010

கர்த்தருடைய கிருபையினால் கன்னியாகுமரி மாவட்டம் – குருந்தன்கோடு யூனியனில் 19.07.2010 முதல் 23.07.2010 வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. இந்த ஊழியத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் நாகர்கோவில் TVGM அறிமுகப்பணி அலுவலக ஒருங்கிணைப்பாள **சகோதரி ஷோபனா** அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு இவைகளை **யாவேயீரே நற்செய்தி ஊழியம் – பாஸ்டர் ஜோசப் சுந்தர்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.





தமிழ்நாட்டிலிருந்து 53 கிராம ஊழியர்கள் வந்து கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் குந்தன்கோடு யூனியனில் உள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திரஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர், TVGM காரியதரிசி சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர், சகோதரி பெர்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டு ஜெபித்து, கிராம ஊழியர்களை உற்சாகப்படுத் தினார்கள். பாஸ்டர் ஜோசப் சுந்தர் அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். இதன் பின் கிராம ஊழியர்களை 11 குழுவாக பிரித்து, தாங்கள் ஊழியம் செய்ய போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள்.





மதிய உணவிற்கு பின் கிராமங்களுக்குள் கடந்து சென்று ஊழியம் செய்தார்கள். இந்த ஊழியத்தின்போது 11,725 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள்,

15,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள் மற்றும் 10,000 சிலுவைக்கொடிகள் கிராமங்களில் இலவசமாக வழங்கப்பட்டது. 86 புறமதநண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டார்கள்.





கடைசிநாள் ஊழியத்தை முடித்து ஊழியர்கள் யாவரும் முன்பு கூடிய இடத்திலேயே கூடி ஜெபித்து, சாட்சி கூறினார்கள். **சகோதரி ஷோபனா** அவர்களும் தன்னுடைய சாட்சியைக் கூறி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகம் சார்பில் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படியும், இனிப்பும் வழங்கப்பட்டது.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோ. மாற்கு மாரியப்பன், பாஸ்டர் ஜெபராஜ், சகோ.செல்வராயர்பால் , டேனியல்.**

**ஆசாரிவிளையை** சுற்றியுள்ள கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷம் அறிவித்தோம். **வீரவிளை** கிராமத்தில் ஒரு வீட்டில் யோவான் புத்தகம் கொடுத்தபோது, அவைகளை அந்த வீட்டிலிருந்து ஒரு சிறு பையன் வாங்கு சுக்கு நூறாக கிழித்து ரோட்டில் எரிந்து விட்டான். இவர்கள் கிறிஸ்தவத்தை எதிர்க்கிறவர்கள் என்று தெரிந்து கொண்டு அடுத்த பக்கம் போய் ஊழியம் செய்தோம். அப்பொழுது இரண்டு பேர் பைக்கில் வந்து எங்களிடம் என்ன தவணை முறையில் பொருள் விற்கிறீர்களா ? என்று கேட்டார்கள். நாங்கள் இல்லை. இயேசுவைப் பற்றி கூற வந்தோம் என்று சொன்னோம். உங்களுக்கு வேறு வேலை இல்லையா என்று திட்டினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 870 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 : சகோதரி கஸ்தூாரி சுப்பையா, மரியாள், ஷீலா, அந்தோணிமேரி, அமிர்தம்.**

அனந்தன்நகர், தம்மத்துக்கோணம் பகுதிகளில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். ஒரு கடைக் காரருக்கு கொடுத்தபோது, அவர் எங்கள் கண் எதிரே தூக்கி வீசி எறிந்தார். வயது முதிர்ந்த ஒருவருக்கு சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 : சகோதரி ரூத் கலா, கிருபா, மணியம்மாள், தெபோராள், ரெபேக்கா**

**சேனவிளை** கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டு வரும்போது, 2 வருடங்களாக தலையின் மண்டை ஓடுப் பகுதியில் வலியினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த சகோதரிக்காக நாங்கள் ஜெபிக்க ஆரம்பித்தவுடனே அந்த சகோதரியைக் கட்டி வைத்திருந்த

அசுத்தஆவி அவளை நான் பாதிக் கொன்று விட்டேன், இனி மீதி கொன்று விட்டுத் தான் போவேன், நீ யார்? எங்கேயிருந்து வருகிறாய்? என்று பேசியது. நாங்கள் இயேசுவின் பிள்ளைகள். இந்த பெண்ணை சேதப்ப டுத்த உன்னால் முடியாது என்று சொல்லி இயேசுவின் நாமத்தில் ஜெபித்தோம். அந்த அசுத்தஆவி அவளை அரை மணி நேரம் அலைக்கழித்துவிட்டு போய் விட்டது. சிறிது நேரம் கழித்து அந்தப் பெண் எனக்கு இப்போது தான் சுகம் இயேசு கொடுத்தார் என்று சந்தோஷத் தோடு சாட்சி சொன்னாள். திங்கள் சந்தையில் ஒரு வாலிபன் எங்களை தரக் குறைவாகப் பேசி, இயேசுவையும் தூஷித்தான். வேறொருவன் எங்களை வாடி போடி என்று என்று திட்டினான். கர்த்தருக்காக எல்லாவற்றையும் சகித்து கொண்டோம். மொத்தம் 1575 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 : சகோ.யோசுவா, செல்வராஜ், அன்பு சாமுவேல், மகாராஜன்.**

**குளச்சல்** பகுதியில் சுவிசேஷத்திற்கு அதிகமாக எதிர்ப்பு இருந்தது. நாங்கள் சமாதானத்துடன் ஊழியம் செய்தோம். வாலிபர்களை சந்தித்து சுவிசேஷம் அறிவித்தோம். காய்ச்சலில் இருந்தவர் களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 970 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 : சகோதரி வசந்தா ஸ்டீபன், எஸ்தர் கனகாம்புஜம், அன்னக்கிளி, ஜெபமணி, மெர்சி ராஜ்.**

**கருக்கன்குழி, தாராவிளை, திக்கணங்கோடு** ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். அநேக குடும்பங்களில் ஜெபித்தோம். R.C. கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த ஒருவர் எங்களை நிறுத்தி சில கேள்விளை கேட்டு, வாக்குவாதம் செய்தார். நாங்கள் அவரிடம் முழு வேதாகமம் தேவை என்றால் அதை வாங்கி வாசியுங்கள் என்றோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 860 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 : சகோதரி எஸ்தர் சாலமோன், மேரி செல்லாவாய், சலோமி சம்மனசு, தேவகிருபை, அன்னாள்.**

**நெய்யூர்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். வியாதியஸ்தர்கள் சிலர் எங்களை ஜெபிக்கும்படி கேட்டார்கள். ஜெபித்த போது கர்த்தர் சுகம் கொடுத்தார். ஒரு வீட்டில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, அவர் எங்களை போங்கள் என்று விரட்டினார். மொத்தம் 1230 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 : சகோ.பால்ராஜ், சூசை மாணிக்கம், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் பெரும்பாலும் சுவிசேஷப் புத்தகங்களை விருப்பத்தோடு வாங்கிக் கொண்டார்கள். எதிர்ப்புகள் எதுவும் இல்லை. ஒரு சிலருக்காக ஜெபித்து கடந்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 : சகோதரி மரியம்மாள், எஸ்தர்பேபி, பாக்கியம், லூயிஸ், கிளமெண்ட்ஸ்மேரி**

நாங்கள் காலையில் ஊழியத்திற்காக ரோட்டில் போய் கொண்டிருக்கும்போது எதிரே இரண்டு ஆண்கள், 1 பெண் வேலைக்காக வந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று அதில் ஒரு ஆண் கீழே விழுந்து பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தான். கூட

வந்தவர்கள் முகத்தில் தண்ணீர் தெளித்தும் கண் விழிக்கவில்லை. உடனே நாங்கள் அவன் தலையில் கை வைத்து இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்லி ஜெபித்தோம். கர்த்தரின் கிருபையால் அவன் கண்விழித்து பார்த்தான். கர்த்தர் பெரிய அற்புதம் செய்தார். ஆசாரிப்பள்ளம் பகுதியில் ஒரு ஆள் எங்களை இழிவாகப் பேசி, ஏன் இப்படி அலைகிறீர்கள்? வெளியே போங்கள் நாய்களா என்று விரட்டினான். மொத்தம் 1150 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 : சகோ.ஜோசப் முரளிதரன், ஜோசப் தார்சிஸ், எபிநேசர், ஸ்டீபன்.**

**பின்னங்காட்டில்** ஊழியம் முடித்து விட்டு வரும்போது ஒரு குடும்பமே திரண்டு வந்து எங்களிடமிருந்த சுவிசேஷப் புத்தகங்களை பிடுங்கி எரிந்தார்கள். இதில் ஒருவன் தகாத வார்த்தைகளை பேசி உங்களை குளத்தில் தள்ளி விடுவோம், எங்கள் ஊருக்குள் நீங்கள் வரக்கூடாது என்று சொல்லியிருக் கிறோம். உங்களுக்கு சம்பளம் கொடுக் காமலா இந்த பிள்ளை பிடிப்பு வேலைக்கு வந்தீங்க என்று எங்களை மிகவும் மோசமான வார்த்தைகளால் வசை பாடினார். இப்படி பேசிக்கொண்டிருக்கும் போதே 10 பேர் கொண்ட ஒரு கும்பல் எங்களிடம் ஓடி வந்தார்கள். நாங்கள் இயேசுவே ஸ்தோத்திரம் என்று சொல்லிக் கொண்டே நின்று கொண்டிருந்தோம். கர்த்தர் அவர்களுடைய கைக்கு எங்களை விலக்கி பாதுகாத்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 970 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 : சகோ.பிரேம் ஆனந்த், நோவா, பாபு சாலமோன், வினுக்குமார், வசந்தகுமார்.**

**கீழ்குளம்** பகுதியில் ஒருவரிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது, விருப்பத்தோடு புத்தகத்தை வாங்கினார். அப்போது பைக்கில் வந்த நபர் இங்கு இந்துக்களை ஏன் மதம் மாற்ற வந்துள் ளீர்கள்? யார் நீங்கள்? என்றார். நாங்கள் பதில் சொல்லியும் கேட்காமல் அவர் இயக்கத்து ஆட்களுக்கு போன் செய்து வரும்படி கூறினார். நாங்கள் அங்கிருந்து வேறு பகுதிக்கு கடந்து சென்று ஊழியம் செய்தோம். அங்கு அவர்கள் வந்து எல்லோரிடமும் இவர்கள் பிள்ளைகளை பிடித்துக் கொண்டு செல்கிறார்கள். போலீசுக்கு போன் செய்துள்ளோம் என்று சொன்னார்கள். சிறிது நேரத்தில் போலீசார் வந்ததும் விவரம் சொன்னோம். அவர்கள் எங்களை புரிந்து கொண்டு அனுப்பி விட்டார்கள். மொத்தம் 970 சுவிசேஷப் புத்தகங்கள், 870 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 : சகோதரி ராணி சந்திரா, கிரேஸ்பத்மா, செல்லக்கனி, மேரிமீனா, அபியேல் அந்தோணியம்மா.**

**சுங்கான்கடை, ஐக்கியபுரம், ஆளூர்** ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தபோது ஒருவர் எங்களிடம் சண்டை போட்டார். நாங்கள் அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்கு போய், ஒரு பள்ளிக்கூடம் அருகில் உட்கார்ந்து சற்று இளைப்பாறினோம். அங்கே சில பையன்கள் வந்து மிகவும் கடுமையாகப் பேசி இங்கிருந்து போய்விடுங்கள் என்று கூறினார்கள். நாங்கள் வீண் விவாதம் வேண்டாம் என்று கடந்து போய் கொண்டி ருக்கும்போது, ஒருவன் பைக்கில் வந்து நீங்கள் சொன்னால் கேட்க மாட்டீர்களா? என்று கையிலிருந்த யோவான் புத்தகங் களை பிடுங்கி எறிந்து விட்டு நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள் என்றனர். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

**சகோதரி சந்திரகலா, பெங்களூர்.**

நான் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றால் **"100–கிராம ஊழியம்"** பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 85% மதிப்பெண்கள் எடுத்து, பள்ளியில் இரண்டாவதாக வர உதவி செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ.பொன்ராஜ், கோவை.**

என்னுடைய பேத்தி 10ம் வகுப்பில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வெற்றியைக் கொடுத்தார்.

**சகோ.மனோ, ஆவடி.**

என்னுடைய இளைய மகனின் B.E. படிப்பிற்காகவும், மூத்தமகளின் குழந்தைபாக்கியத்திற்காகவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். மகன் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றான். மகள் இப்பொழுது 2 மாத கர்ப்பிணியாக உள்ளாள். தேவனுக்கே மகிமை.

**சகோதரி லீனா, தஞ்சாவூர்.**

நாங்கள் குடும்பமாக வெளி நாட்டிற்கு சென்றிருந்தோம். அந்த சமயம் நம் தேசத்தில் பன்றி காய்ச்சல் விரைவாக பரவிக் கொண்டிருந்தது. அப்பொழுது நாங்கள் எந்த சுகவீனமும் இல்லாமல் மறுபடியும் சுகத்தோடு இந்தியா வந்து சேர்ந்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, சுகத்தோடு இந்தியா கொண்டு வந்து சேர்த்தார்.

**சகோ.ஜெபமணிபால், பெரம்பலூர்.**

என் மகன் மற்றும் தங்கை மகளின் தேர்வின் வெற்றிக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு இருவருக்கும் வெற்றியைக் கொடுத்தார்.

**சகோதரி சியாமளாதேவி, நாகை.**

என் அண்ணன் வெளிநாடு செல்ல ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்து **"கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"** என்று கடிதம் எழுதியிருந்தீர்கள். கடிதம் கிடைத்த மூன்று நாட்களிலேயே அண்ணன் வெளிநாடு சென்று விட்டார். அற்புதம் செய்த தேவனுக்கு நன்றி.

**சகோதரி கலைச்செல்வி, திருச்சி.**

**இயேசுவை தெய்வமாக ஏற்றுக் கொண்ட என் வாழ்வில் அவர் செய்த அற்புதங்கள் :** 1. எனக்கு வயிற்றில் ஆப்ரேஷன் நடந்தது. இயேசு என்னை காப்பாற்றினார். 2. என் தம்பிக்கு திருமணம் நடந்தது. 3. தம்பி சொந்தமாக இடம் வாங்க இயேசு கிருபை செய்தார். 4.எனக்கு சொந்தமாக வீட்டை தந்தார். 5.பிள்ளைகளுக்கு தேர்வில் வெற்றியை தந்தார். 6. என் அத்தை சர்க்கரை வியாதியினால் 6 மாதங்களாக எழுந்து நடக்க முடியாமல் இருந்தவர்கள் எழுந்து நடந்தார்கள். இப்படியாக இயேசுவை ஏற்றுக்கொண்ட எனக்கு அவர் பல அற்புதங்களை செய்து வருகிறார். **தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

"உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும்". லூக். 1:14

# கலிலேயா முகாம் - 2010

(மகிழ்ச்சியான நாட்கள்)

நாள் : 2010 அக்டோபர் 1,2,3, வெள்ளி, சனி, ஞாயிறு

இடம் : **கோடாவிளை பஸ் ஸ்டாப்**

(உவரிக்கும் கூடன் குளத்திற்கும் மத்தியில்)

நேரம் : **தினமும் மாலை 6.00 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள், சனிக்கிழமை காலை 10-1மணி)

## தேவசெய்தி

**சகோ. R. ரீகன் கோமஸ்**

**பாஸ்டர் R. அண்டன் கோமஸ்**

**ஜெபியுங்கள்!** பங்கு பெறுங்கள் !

| | |
|---|---|
| **முகாம் ஒருங்கிணைப்பாளர்**<br>**திரு. இரத்தினம் ஆசிரியர்**<br>தொலைபேசி : **04637276306**<br>**திரு. மனோகர் ஆசிரியர்,**<br>தொலைபேசி : **04637 272664**<br>மொபைல் : **94864 81522** | **மீட்பரின் பணியில்**<br>**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**<br>தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்,<br>100 கிராமம்,<br>திருச்சி – 620 102.<br>செல் : **94871 92763** |

## TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2010 ஜுலை மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் ஜுலை மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஜுலை 19 முதல் 23 முடிய **குருந்தன்கோடு** யூனியன் 100–கிராம ஊழியம் வெற்றிகரமாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். எதிர்ப்புகள், தடைகள் வந்தபோதிலும் கர்த்தர் ஊழியர்களை பாதுகாத்து, சுவிசேஷம் கடந்து செல்ல வழி வாசலை திறந்து தந்தார். பொருளாதார தேவைகள் அற்புதமாக சந்திக்கப்பட்டது. பொறுப்பெற்ற சபை போதகரை கர்த்தர் பெலப்படுத்தின். இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறோம். தேவன் இதற்குரிய பிரதிபலனை கட்டளையிடுவாராக.

தொடர்ந்து பின்தொடர்பணி செய்யப்பட, ஆத்துமாக்கள் இயேசுவின் அன்பின் வேருன்ற ஜெபியுங்கள். எமது அறிமுகப்பணி அலுவல ஊழியங்களும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. அடியேனுடைய பெலவீனத்திலும் கர்த்தரின் பெலன் பூரணமாய் விளங்கியது. **தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
**நாகர்கோவில் – 629 001**

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

"**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**". **யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** மாதந்தோறும் 100–கிராம ஊழியத்தின் மூலம் விதைக்கப்படும் விதைகள் 100 மடங்கு பலன் கொடுக்க, ஆங்காங்கே அநேக சபைகள் உருவாக ஜெபியுங்கள். கிராம ஊழியத்தில் கலந்து கொள்ளும் தன்னார்வ தொண்டர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** நமது ஆதி தரிசனம் நிறைவேறி வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். கிராம தரிசனம் பெற்ற ஜெபிக்கிற, உழைக்கிற பிள்ளைகளை கர்த்தர் எழுப்பி தரும்படியாக ஜெபியுங்கள்.

**புதன் :** TVGM ஏலீம் சிறுவர் இல்லப் பிள்ளைகள், இம்மானுவேல் சிறுவர் இல்லப் பிள்ளைகளின் படிப்பிற்காக, சுகத்திற்காக ஜெபியுங்கள். சமூக நலத் துறை ஆணையிட்டுள்ள சகல வேலைகளும் முடித்து அனுப்பப்பட ஜெபியுங்கள்.

**வியாழன் :** TASOL தரிசனத்தை செயல்படுத்த நல்ல ஆலோசகர்கள், ஜெப வீரர்கள், உதவியாட்கள், பொருளாதார வாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள். இதுவரை உதவி செய்த பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிக்கும் படியாக ஜெபியுங்கள்.

**வெள்ளி :** நமது தேச தலைவர் களுக்காக ஜெபியுங்கள். நீதி, நியாயம் நிலைத்திருக்க, அதற்காக போராடு பவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கும் படியாக ஜெபியுங்கள்.

நமது தேசமெங்குமுள்ள ஊழியர்கள் பரிசுத்தத்திலும், உண்மையிலும் திகழ்ந்து தேசத்திற்கு ஆசீர்வாதமாய் காணப்பட ஜெபியுங்கள்.

**சனி :** TVGM ஊழியத்தில் பணி புரியும் முழுநேர ஊழியர் மற்றும் குடும்பங்களுக்காக, இன்னும் தேவையான ஊழியர்களை தந்து கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** இம்மாதம் நடைபெறும் **இராதாபுரம் யூனியன்** 100 – கிராம ஊழியத்திற்காக, **இயேசுவை விரும்புவோர் முகாமில்** அநேக புறமத நண்பர்கள் கலந்து கொண்டு இரட்சிக்கப்பட, ஆலய பிரதிஷ்டை களுக்காக, கட்டி முடிக்கப்பட வேண்டிய ஜெப வீடுகளுக்கு சரியான உதவிகள் செய்யப்பட, இதற்காக கொடுக்கிற தேவபிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வ திக்கும்படியாக ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7


**TVGM தலைமை அலுவலக முகவரி**

**100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )**
**பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-**

**MR.STEPHEN CHRISTOPHER,**
**MANAGING DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
'**100 கிராம ஊழியம்**' அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

**( அல்லது ) சகல ஊழியங்களுக்கும்**
**MR. STEPHEN CHRISTOPHER,**
**SB A/c No:12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.**
**இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம் - திருச்சி





TVGM சிறுவர் இல்ல மாணவன் **ஹரிகிருஷ்ணனின்** பிறந்த நாள் அன்று, அவனை ஸ்பான்சர் செய்து வரும் **சகோதரி பேன்ஸி தேவக்குமார்** அவர்கள் சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவருக்கும் சிறப்பு உணவு வழங்கினார்கள். மேலும் ஜுலை மாதத்தில் **சகோதரி ஷீபா மதுரம், அகல்யா சாம்ராஜ், வளர்மதி, சகோ. தங்கவேல்,** ஆகியோர் சிறப்பு உணவு வழங்கினார்கள். இவர்களுக்கு சிறுவர் இல்லப் பிள்ளைகள் சார்பில் நன்றி கூறுகிறோம்

**கர்த்தர் தாமே இவர்களை ஆசீர்வதிப்பாராக!**

To

**Return Requested:**

TVGM , Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.